# வாரியபொல பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, வாரியபொல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாரியபொல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கொங்கிரீட் துண்டுக்கற்கள் செயற்திட்டத்தின் செயற்பாட்டு விளைவுகளை கணிப்பீடு செய்யும் போது ஆரம்ப முடிவுப் பொருள் இருப்புக்கள் ரூபா 609,017 ஆகக் காணப்பட்ட போதிலும் உற்பத்தி அறிக்கையின் பிரகாரம் அந்த இருப்பின்

பெறுமதி ரூபா 735,015 ஆனமையால் செயற்திட்டத்தின் இலாபம் ரூபா 125,998 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 238,445 பெறுமதியான தண்ணீர் பவுசரின் பெறுமதி மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,223,784 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,226,467 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,952,437 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பிரதேச சபையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைப்பணம் பிரதேச சபையின் பொது நிதியத்திற்கு கொண்டு வரப்படாமல் வைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன் அவ்வாறு பெறப்பட்ட பணத்திலிருந்து பல்வேறு பொது மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காக 9 சந்தர்ப்பங்களின் போது ரூபா 748,460 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே காணி கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் அபிவிருத்தி உதவியாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போதும் பெறப்பட்ட ரூபா 2,500,000 தொகை வருமானத்திற்கு எடுக்கப்படாமல் வைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,544 | 3,291 | 1,000 |
| (ii) | வாடகை | 8,260 | 8,302 | 141 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,330 | 1,356 | 47 |
| (iv) | ஏனைய வருமானம் | 71,318 | 62,336 | 68,315 |

### 2.3.2 விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையினால் விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர பற்றுச்சீட்டில்களில் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இல. 59 மற்றும் 67 இல் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 254,750 ஆகவும் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 68,000,000 ஆகவும் இருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதி தொடக்கம் 16 ஆந் திகதி வரை வியட்னாம் சுற்றுலாவிற்காக வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆனையாளரின் 2012 யூலை 25 ஆந் திகதிய ஜீஜீஆர்சீ/21/30 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அமையக் கொடுப்பனவாக நாளொன்றிற்கு ஐ.அ.டொலர் 30 செலுத்துவதன் கீழ் 7 தினங்களுக்குச் செலுத்தக்கூடிய பணம் ரூபா 27,930 (133x30x7) ஆக இருந்த போதிலும் அந்தச் சுற்றுலாவில் ஈடுபட்ட சபையின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு அமையக் கொடுப்பனவாக ரூபா 50,000 படி சபை நிதியத்திலிருந்து ரூபா 100,000 செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி இல. 203 இன் பிரகாரம் சபையின் சொத்துக்கள் தொடர்பாக பூரண மெய்மையாய்வு மேற்கொள்வதற்காக சபையின் பிரதிநதி ஒருவர், சபையின் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் போன்றவர்களை உள்ளடக்கிய சபையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தும் 2011 இன் மெய்மையாய்வு சபையின் சில உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் அகற்றுதவற்கு சிபார்சு செய்யப்பட்ட ரூபா 251,150 பெறுமதியான சொத்துக்கள் ஆண்டில் இறுதியில் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

**2.6 மனிதவள முகாமைத்துவம்**

சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 91 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 82 ஆக இருந்தது. அதற்கு மேலதிகமாக அமைய, நாட்சம்பள அடிப்படையின் கீழ் 58 ஊழியர்கள்

சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் சம்பள மீளளிப்பு பெறப்படாத 29 சிற்றூழியர்களும் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். அதற்காக அண்ணளவாள மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 11,839,663 தொகை அளவில் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்குரிய அங்கிகரிக்கப்பட்ட 2 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவியும் அங்கீகரிக்கப்பட்ட 4 நூலகர் பதவிகளில் 1 பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,007,580 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 7,976 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

(ஆ) வாரியப்பொல நகரில் சிறிய அளவிலான வியாபாரத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ஒரே தடவையில் செலுத்தும் பண முறைமையில் கேள்வி வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய தொழில்நுட்ப அறிக்கை பெற்றுக்கொள்வதிலுள்ள தாமத்தின் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 7,082,650 தொகையான ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை பெற்றுக் கொள்ளுதல் கைவிடப்பட்டிருந்தது.

(இ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகள் காணப்பட்ட போதிலும் அதில் முச்சக்கர வண்டி நிறுத்துவதற்குரிய வருடாந்த அல்லது கால ரீதியான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளை பதிவு செய்வதற்கோ அல்லது நிறுத்துமிடங்களை முறைமைப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சில வருடங்களுக்கு முன்னர் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து சபைக்குக் கிடைத்த இல. 27 ஸ்ரீ 840 என்ற கெண்டர் வாகனம் சபைக்கு சட்ட ரீதியாக கையேற்கப்பட்டிராததுடன் அந்த வாகனத்திற்கான வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்